REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: வைகாசி 3உ செவ்வாய் (17—5—55) ★ ★ வெளியீடு: வைகாசி 4உ புதன் (18—5—55) [இதழ் 287

'ஆசாத் காஷ்மீர்'ல் போலீசார் 'புரட்சி ?'

சாந்திகார், மே 16—

'ஆசாத் காஷ்மீர்' என்ற காஷ்மீர் பகுதியில் உள்ள போலீசார் 'புரட்சி'யில் ஈடுபட்டதை ஒட்டி, அவர்கள் அத்தனை பேரும் தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கின்றனர் என்று தெரியவருகிறது.

போலீசாரின் 'அதிருப்திக்கு'க் காரணம் எதுவும் அறிவிக்கப்பட்டதாகத் தெரியவில்லை; நிலைமையைச் சீர்செய்ய மத்திய அரசாங்கம் உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறதாம்.

மாநில அரசாங்கம் சுமார் 500 போலீசாரை அந்த எல்லைக்கு விரைந்து அனுப்பியுள்ளனர் என்றும் தெரியவருகிறது.

தி.மு.கழக வரலாற்றில் திருப்புமுனை

மதுரையில் மகத்தான திராவிட இன எழுச்சி!

வெள்ளம்போல் மக்கள் கூட்டம்—இடி முழக்கமென வாழ்த்தொலிகள்

தி.மு. கழக பொதுச்செயலாளர் நெடுஞ்செழியனுக்கு வரவேற்பு ஊர்வலமும் பாராட்டும்

கடந்த ஏப்ரலில் கழகம் முழங்கிய ஜனநாயக முரசு கேட்டு பூரிப்பும், பெருமையும் கொண்ட மதுரை மாநகர், தி. மு. கழகத்தின் பொதுச்செயலாளர் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு, முதன்முறையாக வருகைதந்த இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு மாபெரும் வரவேற்புத் தந்தும், பாராட்டு தெரிவித்தும் மகிழ்ச்சியுற்றது.

15—5—55 மாலை, பல்லாயிரம் கழகக் காளையர் களிப்புக் கடலில் நீந்தியவாறே, கழக இலட்சிய முழக்கங்களை எழுப்பிக்கொண்டு, மைல் கணக்கில் அணிவகுத்து, ஊர்வலமாக மதுரை நகரைச் சுற்றி வந்த காட்சி, மதுரை மக்களுக்கு முற்றிலும் புதியதாய் அமைந்திருந்தது.

அன்று காலையில், பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் அவர்கள் புகைவண்டி நிலையத்தில் வரவேற்கப்பட்டதும், என்றும் நினைவிலிருக்கும் சம்பவமாயிருந்தது; நகர் முழுவதும் அன்று, அலங்காரத் திருக்கோலம் பூண்டிருந்தது.

தோழர்கள் ஆயிரமாயிரமாகக் கூடி வரவேற்பது காணுதென எண்ணியோ என்னவோ, எப்பக்கம் திரும்பினும் கழகக் கொடிகள், தோரணங்கள், வரவேற்பு வளைவுகள் அமைத்து, அவையும் வரவேற்புத் தரச் செய்திருந்தனர்போலும், கழகத் தோழர்கள்!

காலை வரவேற்பும், மாலை ஊர்வலமும், இரவு பொதுக் கூட்டமும் கண்டவர், 'கண்ணுடையோர்' எனத்தக்க வகையில் இருந்தன.

15—5—55 காலை 9 மணிக்கு, புகைவண்டி நிலையத்தில், மதுரை மாவட்டச் செயலாளர் தோழர் எஸ் முத்து, மதுரை நகர் செயலாளர் தோழர் பி. கே. சேதுராமன் ஆகியவர்கள் முன்னின்று வரவேற்க, 3,000-த்திற்கு மேற்பட்ட கழகத் தோழர்களும், பொது மக்களும், 'திராவிட நாடு திராவிடருக்கே,' 'பொதுச் செயலாளர் வாழ்க' என்ற ஒலி முழக்கத்துடன் தி. மு. கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களை வரவேற்றனர்.

வரவேற்பில், தோழர்கள் எஸ் பார்த்தசாரதி, ஆவடையப்பன், இ. ரெங்கசாமி, மற்றும் பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

அன்று, மதுரை நகரெங்கும் வரவேற்பு வளைவு தட்டிகளும், தோரணங்களும் கட்டி அலங்கரித்திருந்தனர்.

அன்று காலை 10 மணிக்கு அழகரடி வேலாயுதம் நினைவுப் படிப்பக ஆண்டு விழா தோழர் எஸ். முத்து தலைமையில் நடைபெற்றது. தோழர் எ. கோவிந்தசாமி எம் எல் ஏ., பொதுச். செயலாளர் இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் ஆசிரியர் வேலாயுதம் அவர்களின் தொண்டு பற்றியும், இன்றைய அரசியல் நிலை பற்றியும் பேசினர்.

★

தேநீர் விருந்து

மாலை 4 மணிக்கு மேலமாசி வீதி, உடுப்பி போர்டிங் லாட்ஜில், தோழர் எஸ். பார்த்தசாரதி அவர்கள் தலைமையில் தேநீர் விருந்து நடைபெற்றது. 300-க்கு மேற்பட்ட தோழர்கள் கலந்துகொண்டனர்.

தலைமை தாங்கிய தோழர் எஸ். பார்த்தசாரதி அவர்கள், ஜஸ்டிஸ் கட்சிக்கும், திராவிட முன்னேற்ற கழகத்திற்கும் உள்ள வேறுபாட்டை எடுத்துக்காட்டி, பொதுச் செயலாளராக இரா. நெடுஞ்செழியன் தேர்ந்தெடுக்கப்பட்டதை வரவேற்றுப் பாராட்டிப் பேசினார்.

பின்னர், தோழர் எ. கோவிந்தசாமி, எம் எல் ஏ, காஞ்சி-கல்யாணசுந்தரம், டாக்டர் அருணாசலம் ஆகியோரும் பாராட்டிப் பேசினர்.

பாராட்டிற்கு நன்றி தெரிவித்து பொதுச் செயலாளர் பேசியதாவது:—

"அண்ணாவின் அறிவுரையை ஏற்று, கழகத் தோழர்களின் ஒத்துழைப்புடன் கழகத்தை நல்ல முறையில் நடத்துவேன்,"

என்று குறிப்பிட்டுவிட்டு, பாராட்டிப் பேசிய தோழர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

பின்னர், மாவட்டச் செயலாளர் எஸ். முத்து நன்றி கூறினார்.

(4-ம் பக்கம் பார்க்க)

விதிகள் தோறும் இராணுவத்தினர்!

அறப்போரைத் தடுக்கும் போக்கில் 'அவல நிலை'!

கோவா ஒரு பெரிய இராணுவ முகாம் போல் காட்சி தருகிறது; கோவாவின் தெருக்கள் தோறும்—பெரிய, சிறிய தெருக்கள் அனைத்திலும் போர்ச்சுகீசிய இராணுவ தளத்தவர் ரோந்து சுற்றிக்கொண்டிருந்த வண்ணமுள்ளனர்.

கோவாவில் நடைபெறவிருக்கும் சத்தியாக்கிரகத்தைத் தடுக்கச் செய்வதற்கான ஏற்பாடுகளை, கோவா சர்க்கார், ஏதோ ஒரு 'பெரிய இராணுவ தாக்குதலை'ச் சமாளிக்கச் செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவது போல் காணப்படுகின்றனர்.

கோவா மக்கள் ஒவ்வொருவரையும்—அவர்கள் சர்க்கார் பணியாளர்களாக இருந்தாலும் சரி—அல்லது சாதாரணக் குடி மகனாக இருந்தாலும் சரி—அவர்களையெல்லாம் போர்ச்சுகீசிய அதிகாரிகள் 'சந்தேகக் கண்'களுடன் பார்க்கின்றனர் என்று கூறப்படுகிறது.

கோவா அட்டூழியங்களை எதிர்த்து, சத்தியாக்கிரகம் செய்ய முடிவு செய்துள்ள சேனாபதி பாபட், கோரே ஆகிய இருவரும், தங்கள் தொண்டர்களுடன் சவந்தவாடியிலிருந்து தோடா மார்க்கிற்குப் புறப்பட்டுவிட்டனர் என்று தகவல் கிடைத்திருக்கிறது.

19-ந் தேதியன்று அவர்கள் கோவா எல்லைக்குள் 'முதல் சத்தியாக்கிரகக் குழு'வினராக நுழைவார்களாம்.

'பக்தூனிஸ்தான்' அமைப்பிற்கு 'வாக்கெடுப்பு' நடத்துக!

'சம்மதிக்காவிட்டால் சச்சரவு நீடிக்கும்'

ஆப்கன் வெளிநாட்டு மந்திரி அறிவிப்பு

லாகூர், மே 16—

"தொடர்ந்து பாகிஸ்தானின் ஒரு பகுதி மக்களாகவே வாழ்வதா, அல்லது சுதந்திர தனி நாடாக 'பக்தூனிஸ்தான்' அமைத்துக்கொண்டு வாழ்வதா?—என்பதை வாக்கெடுப்பு மூலம் பக்தூன் மக்கள் தீர்மானிக்க சந்தர்ப்பம் தரவேண்டும் என்ற ஆப்கனிஸ்தான் கோரிக்கையை பாகிஸ்தான் சர்க்கார் ஏற்றுக் கொள்ளாவிட்டால், இரு நாடுகளிடையேயும் நிலவும் இன்றைய நெருக்கடி தீராது,"

—என்று, ஆப்கன் வெளிநாட்டு மந்திரி சர்தார் முகம்மது நயிம்கான் குறிப்பிட்டிருக்கிறார்.

"இந்த வாக்கெடுப்பை நடத்த பாகிஸ்தான், ஆப்கனிஸ்தான், மற்றும் இந்த இரு நாடுகளும் ஒப்புகிற ஒரு நடுநிலை நாடு ஆகியவை கொண்ட மேற்பார்வை குழு அமைக்க வேண்டும்," என்றும் காபூல் வானொலி மூலம் பேசிய ஆப்கன் மந்திரி குறிப்பிட்டிருக்கிறார்.

இப்போது நடைபெற்றுவரும் சமரச முயற்சிகளின் விளைவு எதுவாயிருப்பினும், பக்தூனிஸ்தான் பிரச்சினையில், ஆப்கன் சர்க்கார் தங்கள் கொள்கையை மாற்றிக்கொள்ளமாட்டார்கள் என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

"1947-ல், பாகிஸ்தான் அமைவதற்கு வடமேற்கு எல்லைப்புற மாநிலத்தில் வாழும் பக்தூன்கள் சம்மதம் பெற வேண்டும் என்பதற்காக நடத்தப்பட்ட வாக்கெடுப்பு வெறும் 'ஏமாற்று வித்தை'; எனவேதான், ஆப்கன் சர்க்கார், அன்றுமுதல்; 'நடுநிலைமையான வாக்கெடுப்பு நடத்த வேண்டும்' என்று கோரி வந்திருக்கின்றனர்,"

என்றும் ஆப்கன் மந்திரி தெரிவித்திருக்கிறார்.

தகராறுகளுக்கு முடிவு காண முயற்சி

பாகிஸ்தான், ஆப்கனிஸ்தான் ஆகிய இரு நாடுகளுக்குமிடையில் உள்ள தகராறுக்குத் தீர்வு காண்பதற்காகப் பலரும் முயற்சித்து வருவது தெரிந்ததே.

சவூதி அரேபிய மன்னர், பிரச்சினைக்கு கூறும் எந்த ஒரு நியாயமான முடிவையும் தாங்கள் ஏற்றுக்கொள்ளச் சித்தமாயிருப்பதாக ஆப்கன் பிரதம மந்திரி அறிவித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

மாஸ்டர் தாராசிங் வழக்கு விசாரணை

நீதி மன்ற மாற்றம் அனுமதிக்கப்படுகிறது

அமிர்தசரஸ், மே 16—

மாஸ்டர் தாராசிங், மற்றும் இதரர் மீது தொடரப்பட்டுள்ள வழக்கை அமிர்தசரஸ் மாவட்டத்திற்கு அப்பால் உள்ள வேறு ஒரு நீதிமன்றத்தில் விசாரிக்க வேண்டுமென்று மாஸ்டர் தாராசிங் கேட்டிருந்தபடி, அவர், உயர் நீதிமன்றம் மூலமாக, மாற்றத்தைப் பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

61 தலைவர்கள் கைது!

சாந்திகார், மே 16—

இதுவரை தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ், 61 அகாலி தளத் தலைவர்கள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரியவருகிறது.

கைது செய்யப்பட்டோரில் பஞ்சாப் முன்னாள் மந்திரியும், அகாலி தளப் பொதுச்செயலாளருமான கியானி சர்தார் சிங், மற்றும் இரண்டு சட்ட சபை உறுப்பினர்களும் உள்ளனர்.

250 தொண்டர்கள் கைது!

அமிர்தசரஸ் மாவட்டத்தில் மட்டும், இங்கு நடைபெற்றுவரும் கிளர்ச்சியையொட்டி, இதுவரையிலும் 250 அகாலி தளத் தொண்டர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ள அகாலி தளத் தலைவர்கள், பிரமுகர்கள் நீங்கலாகக் கைது செய்யப்பட்டுள்ளவர்களின் தொகையே இது என்று தெரிகிறது.

உலகிலேயே பெரிய பாலம்

பிரெஞ்சுக் காமரூனிலுள்ள தௌலா எனும் இடத்தில் 100 மைல் 1 பர்லாங் நீளமுள்ள, உலகிலேயே மிகப் பெரிய பாலம் ஒன்றை பிரெஞ்சுக் காலனி அமைச்சர் திறந்துவைத்திருக்கிறார்.

'இந்தியின் எதிர்காலத்தை ஆபத்திற்குள்ளாக்காதீர்'

இந்தி குழுவிற்கு டாண்டன் அச்சுறுத்தல்!

பருக்கா பாதி, மே. 16—

"மிகப் பெரிய இலக்கியம் கொண்ட இந்தி மொழி (!) இந்தியாவின் தேசீய மொழியாக இருக்கும் உரிமை கொண்டாட முடியும்;

"இந்தி மொழிதான் இந்தியாவின் சமூக, கலாச்சார அரசியல் ஒற்றுமையை (!) பாதுகாக்க முடியும்;

"இந்தி மொழி, வேறு எந்த பிரதேச மொழிக்கும் விரோதமானதல்ல; வேறெந்த மொழி வளர்ச்சியையும், முன்னேற்றத்தையும் ஒழித்துக் கட்ட இந்தி முற்படாது; பாடுபடாது.

"இந்தி குழு நியமிக்கப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன்; அந்தக் குழுவின் பிரதிநிதிகள், இந்தியின் 'நீண்ட எதிர்காலத்தை கவனத்தில்' கொண்டு காரிய மாற்ற வேண்டும்."

—இவ்வாறு, உத்திர பிரதேச இந்தி சாகித்திய சம்மேளனத்தைத் துவக்கி வைக்கும்போது, புருஷோத்தமதாஸ் டாண்டன் குறிப்பிட்டிருக்கிறார்.

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 17—5—'55 செவ்வாய்

அச்சம் அகலுமா?

உலகம், இரண்டாம் பெரும் போர் ஒன்றின் கோரத்தைக் கண்டு நெடுநாட்களாகிவிடவில்லை; அந்தப் பெரும் போரில் அது தனக்கேற்பட்ட மகத்தான நஷ்டங்களைப் பூரணமாக ஈடுசெய்து கொண்டுவிட்டதாகவும் கூறிவிட முடியாது!

'பெரும் போர்!' என்ற சொல், உலகத்தின் கடைக்கோடியில், காலச் சுழற்சியின் வேகத்தை உணர்ந்து கொள்ளாமல் வாழும் மக்களுக்குக் கூட அச்சத்தையும், அருவருப்பையும் தந்திருக்கிறது.

இந்த நிலையில், 'மீண்டும் ஒரு உலகப் பெரும் போர்' என்ற குரல் எங்கேனும் கேட்டால், மனித சமூகம் அச்சத்தால் நடுநடுங்குவது ஆச்சரியத்திற்குரியதல்ல!

இரண்டாம் உலகப் பெரும் போர் முடிந்துவிட்டாலுங்கூட, மீண்டும் அத்தகைய போர் தோன்றுமோ என்ற அச்சத்தைத் தரக்கூடிய 'சம்பவங்கள்' அவ்வப்போது, அடிக்கடி அடுக்கடுக்காக நடைபெற்றுக்கொண்டேதான் வருகின்றன.

இரண்டாம் உலகப் பெரும் போரை ஒரு 'வழி'க்குக் கொண்டுவந்த அணுகுண்டு, இன்று, நீர்வளிக்குண்டாக உருவெடுத்து, 'உலகத்தையே அழித்துவிடுவேன்,' என்று அச்சுறுத்திக்கொண்டு இருக்கிறது. உலகப் பெரும் வல்லரசுகளாகத் திகழும் நாடுகள், இந்த 'அழிவு சக்தி'யைக் கட்டி வளர்ப்பதில் கண்ணுங் கருத்துமாயிருந்து வருகின்றன.

அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன் ஆகிய வல்லரசுகள், இந்த அணு ஆயுத வளர்ச்சியில் தீவிர அக்கரை காட்டிவருவது கண்கூடு!

அணு ஆயுத உற்பத்தியில் முதலிடம் பெற்றிருப்பதை, 'தனக்குரிய பெருமை' என்று அமெரிக்கா எண்ணிக்கொண்டிருக்கிறது.

மனித சமூகத்தின் ஆயிரமாயிரமாண்டுகால நாகரிகத்தைப் பூண்டோடு அழித்துவிடும் இந்த அணு ஆயுதங்களின் கொடிய விளைவுகளை, அந்த ஆயுத உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் எல்லா வல்லரசுகளும் உணர்ந்தே இருக்கின்றன.

ஆனாலும், அணுகுண்டு பரிசோதனைகள் தொடர்ந்து நடந்த வண்ணமே உள்ளன.

அதே நேரத்தில் அமெரிக்கா, அணு சக்தியை சமாதான காரியங்களுக்கு எப்படியெல்லாம் பயன்படுத்தலாம் என்பதைப் படமாக்கிக் காட்டாமல் இல்லை; அணுசக்தி கப்பல் செய்து, உலகத்தைச் சுற்றிவரச் செய்கிறது!

அதேபோது, தன்னிடமுள்ள நீர்வளிக் குண்டுகளின் எண்ணிக்கையை வளர்த்தும் வருகிறது.

ரஷ்யாவும், 'நாங்கள் ஒன்றும் அணு ஆயுத உற்பத்தியில் பின்தங்கிவிடவில்லை; அமெரிக்காதான் பின்தங்கிக் கிடக்கிறது,' என்ற தோரணையில் பேசிக்கொண்டே, 'அணுசக்தி, அமைதியான காரியங்கள் பலவற்றிற்கும் பயன்படும்,' என்று கூறவும் தவறவில்லை!

பிரிட்டனும், நீர்வளிக் குண்டு உற்பத்தி செய்ய மக்கள்சபை அனுமதியைப் பெற்றிருக்கிறது.

இப்படி, 'உலகத்தை அழித்துவிடுவேன்,' என்ற நிலையில், அணு ஆயுதங்கள், உலக மக்களை அச்சுறுத்திக்கொண்டிருக்கின்றன.

உலகத்தில் இப்போது நிலவிக் கொண்டிருக்கும் 'குழப்பிய அமைதி'யையும் குலைத்துக் கொண்டிருக்கும் பிரச்சினைகளும் இல்லாமலில்லை.

கொரியப் போர், கிரீஸ் கலகம், குவாடிமாலா தகாறு, இந்தோ-சீனப் போர், பார்மோசா பிரச்சினை—என்ற நிலையில், அமைதி குலைந்து உலகப் போர் மூளுமோ?' என அச்சமூட்டும் 'சம்பவங்கள்' தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

இதற்கிடையில், 'கூடிவாழ்தல்,' 'உலக சமாதானம்,' ஆகியவைபற்றி பேசப்படத்தான் செய்கின்றன; வேடிக்கை என்னவெனில், மனித இனத்தைப் பூண்டோடு அழிக்கும் அணு ஆயுதங்களை வெடித்துப் பார்த்து, அவற்றை அடுக்கிக்கொண்டேயிருப்போர், 'அமைதி! உலக அமைதி! சமாதானம்! இவையே எமது குறிக்கோள்!'—என்று கூறுவதுதான்!

ஆறு, ஏழு ஆண்டுகள் உலகத்தையே உலுக்கிய பெரும் போரில் பெற்ற பாடங்கள் கூட, உலக வல்லரசுகளுக்கு, 'இனி, ஓர் போர் கூடாது' என்ற எண்ணத்தை ஊட்டத் தவறிவிடுமோ என்றுகூட மக்கள் அஞ்சுகின்றனர்.

'நிரந்தரமாக, உலகத்தில் சமாதானம் நிலவுவதற்கு வழி காண வேண்டும்,' என்ற எண்ணம், எல்லா வல்லரசுகளுக்குமே இருப்பதாகவேறு கூறப்படுகிறது; என்றாலும், அந்த வல்லரசுகளின் இறந்த கால, நிகழ் கால நடைமுறைகள், அவர்களது நல்லெண்ணத்தில் மக்களுக்கு சந்தேகத்தை எழுப்பக்கூடியனவையாகத்தான் இருக்கின்றன.

எந்த ஒரு பகுதியில் வாழும் மக்களும், இனி ஒரு போர் மூளுவதை கனவில்கூட காண விரும்பாதவர்களாயிருக்கின்றனர் என்பதை உலக வல்லரசுகள் உணர்ந்திருக்கின்றனவோ என்னவோ?

அணு ஆயுத உற்பத்தி தடை செய்யப்பட்டு, உலக மக்களுக்கு அணு ஆயுதங்கள் விளைவிக்கும் ஆபத்துக்களிலிருந்து பூரண பாதுகாப்பு வேண்டும் என்று உலகெங்கணுமுள்ள 'சமாதானப் பிரியர்கள்' கோரி வருவதை வல்லரசுகள் செவிமடுத்து கேட்டதாகவே தெரியவில்லை.

"உலகே மாயம், வாழ்வே மாயம்! இந்த உலகில் நாம் காணும் சுகமே மாயம்!"—"காயமே இது பொய்யடா! வெறும் காற்றடைத்த பையடா!" என்று, இந்த உலக வாழ்வின் நிலையாமை பற்றி ஊருக்கு உபதேசம் செய்யும் இராசகோபாலாசாரியார் கூட "உலகத்தை அழிக்கும் அணு ஆயுதங்களை தடை செய்க! அணுகுண்டுகளை உற்பத்தி செய்யும் அமெரிக்காவிடமிருந்து உதவி பெறுநீர்! அவர்கள், தங்களிடமுள்ள அணுகுண்டுகளை கடலில் எறிந்துவிட வேண்டும்! என்றெல்லாம கண்டனக் குரல் எழுப்புவதைக் காண்கிறோம்.

ஆச்சாரியார் போன்றோரே அணு ஆயுத உற்பத்திக்குக் கண்டனம் தெரிவித்திருப்பது, 'அணு ஆயுதங்களின் ஆபத்தினின்றும் மனித சமூகம் விடுவிக்கப்பட வேண்டும்' என்ற ஆசை கொண்டவர்கள் உலகத்தில் மிகப் பிற்போக்குவாதிகளாயிருப் போரிலும் இருக்கின்றனரென்பதை எடுத்துக்காட்டுவதாயுள்ளது.

'உலகப் போர்,' 'அணு ஆயுதங்கள்' என்ற ஆபத்துக்களை உருவாக்கக்கூடிய பல்வேறு பிரச்சினைகள் பற்றியும் கூடிப் பேசி முடிவு காண, தங்களுக்குள் எண்ணற்ற 'பெரும் பிணக்கு'களை வைத்துக் கொண்டே நான்கு பெரும் வல்லரசுகளும் முன்வந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

அவர்கள் கூடிப் பேசிக் காணும் முடிவுகள், உலக மக்களை அச்சுறுத்திக்கொண்டிருக்கும் 'அணு ஆயுத உலக யுத்தத்தை'த் தவிர்க்கும் தன்மையும், ஆற்றலுமுடையனவா என்பது நீண்ட நாள் பொறுத்திருந்து பார்க்க வேண்டியதாகவே உள்ளது. அதற்கிடையில் கூடிப் பேசப் போகும் வல்லரசுகள், 'உலகத்தில் வாழ வேண்டும்,' என்ற எண்ணங்கொண்ட கோடானுகோடி மக்களை மனதில் கொண்டு, தூய உள்ளத்துடன் பிரச்சினைகளை அணுகி, நல்ல முடிவுகளை மேற்கொள்ளுவார்கள் என எல்லோரையும் போல நாமும் நம்புவோமாக!

22,000 வெள்ளையரல்லாதார்

வீடிழப்பர்!

கேப் தீபகற்பத்தில் அமுல் செய்யப்படுவதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள இனவாரி குடியிருப்புத் திட்டங்கள் அங்கீகரிக்கப்படுமானால், சுமார் 22,000 வெள்ளையரல்லாதார் தாங்கள் இப்போது குடியிருக்கும் இடங்களைவிட்டு, வீடு வாசல் இழந்து வேறிடம் செல்ல வேண்டியவர்களாயிருப்பர்.

முன்னாள் ஜாகீர்தாரிடம் 'அடிமை'யாயிருந்த பெண்மணி

நீதிமன்றத்தால் விடுதலை பெற்றார்!

போபால், மே 16—

முன்னாள் ஜாகீர்தார் ஒருவரிடம் 'அடிமை'யாயிருந்த 20 வயதுப் பெண் ஒருவருக்கு நீதிபதி 'விடுதலை' வாங்கித் தந்த சம்பவம் இங்கு நடைபெற்றிருக்கிறது.

கீதாபாய் என்ற அந்தப் பெண் தனது குழந்தைப் பருவ முதல், அர்ஜுன் சிங் என்ற முன்னாள் 'ஜாகீர்தார்' வீட்டில் 'அடிமை' வேலை செய்து வந்திருக்கிறார்.

அவருடன் அவரது இளைய சகோதரியும், 50 வயது நிரம்பிய தாயாரும் இருந்திருக்கின்றனர்.

இந்தப் பெண் பிறந்து சில மாதங்களுக்கெல்லாம், தாயும், தந்தையுமாக ஜாகீர்தாரிடம் வேலைக்கு அமர்ந்ததையும், பின்பு, 'ஜாகீர்தார்,' தந்தையை அடித்து விரட்டிவிட்டதாயும், அதிலிருந்து 20 ஆண்டுகள் அவர்கள், ஜாகீர்தாருக்கு உழைத்ததாயும் நீதி மன்றத்தில் கூறப்பட்டிருக்கிறது.

முதலில், கீதாபாய், ஜாகீர்தார் வீட்டைவிட்டு ஓடிவந்து போலீசாரிடம் தங்களது 'அடிமை' நிலையை விளக்கியதாகவும், போலீசார், அவரது தாயையும், சகோதரியையும் மீட்கச் சென்றபோது, ஜகீர்தார், அவர்களை விடுவிக்க மறுத்துவிட்டதாயும், பின்பு, பலத்த போலீஸ் பட்டாளம் சென்று அவர் வீட்டை வளைத்துக் கொண்டு, தாயையும், சகோதரியையும் மீட்டதாயும் நீதி மன்றத்தில் கூறப்பட்டது.

இரண்டாம் முறை அந்த ஜாகீர்தார் பணிந்துவிட்டதாயும், நீதிமன்றத்தில்கூட அவர், அந்தப் பெண்மணிகளை விடுவித்துவிடத் தயாராக இருப்பதாக அறிவித்ததாயும் தெரியவருகிறது.

இரண்டு நாட்களில் 3,000 திருமணங்கள்

இரண்டே நாட்களில் புனாவில், சுமார் 3,000 திருமணங்கள் நடைபெற்றதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

'பூநூல்' அணிவிக்கும் உபநயன விழாக்களும், திருமண விழாக்களின் எண்ணிக்கையோடு போட்டியிட்டுக்கொண்டு, சுமார் 2,500 வரையில் நடைபெற்றிருக்கிறது.

தெரிந்ததுதானே!

சென்ற ஏப்ரல் திங்கள் மத்திவரையிலும் மொத்தம் 56,420 அகதிகளுக்குஇடைக்கால நஷ்டஈடாக ரூ. 13 கோடிக்கு மேல் கொடுத்துள்ளதாகவும், அவற்றுள் ரொக்கமாக ரூ. 28 லட்சமும், மீதித் தொகைக்கான சொத்துக்களும், 2 லட்சம் ஏகர் நிலமும் கொடுக்கப்பட்டதென்றும் அகதிகள் நல இலாகா அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

30-கோடி மக்களை பிணைக்கும் ஒப்பந்தம்

ரஷ்யத் தளபதி தலைமையில் கூட்டு இராணுவம்

வார்சா (போலந்து), மே 14—

புதிய கூட்டு இராணுவம் ஒன்று அமைப்பதற்கான வழிகோலும் 'ஒத்துழைப்பு, பரஸ்பர உதவி ஒப்பந்த'த்தில் சோவியத் ரஷ்யாவும், மற்றுமுள்ள 7 கிழக்கு ஐரோப்பிய கம்யூனிஸ்டு சார்பு நாடுகளும் கையெழுத்திட்டுவிட்டனவாம்!

"சமாதானத்தை நிலைநிறுத்துவதற்கான கூட்டணியில் இந்த ஒப்பந்தம், ஒருவரையொருவர் பிணைக்கிறது. அது தவிர, 60 கோடிக்கு மேற்பட்ட சீன மக்களும் இதை ஆதரிக்கின்றனர்," என்று, செய்தி நிறுவனம் ஒன்றினால் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்த ஒப்பந்தம், கடந்த மூன்று நாட்களாக இங்கு நடைபெற்ற சோவியத், கம்யூனிஸ்டு நேச நாடுகளின் மாநாட்டின்போது மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இந்த இராணுவக் கூட்டமைப்பு, மேற்கத்திய இராணுவக் குழுக்களில் மேற்கு ஜெர்மனி சேர்க்கப்பட்டிருப்பதற்கு எதிர் நடவடிக்கையாகஅமைக்கப்பட்டுள்ளதாகும்.

இந்த ஒப்பந்த அமுல் 20 ஆண்டுகளுக்கு நீடித்து நிற்கும் என்று கூறப்படுகிறது.

எட்டு நேச நாடுகளின் இராணுவங்களும் ஒரே தலைமையின்கீழ் ஒன்றுபடுத்தப்படும்; தங்களை தனித்தனியாகவோ, அல்லது தங்கள் குழு முழுவதையுமே, பாதிக்கிற எந்த அரசியல் பிரச்சினைகளிலும் அந்த 8 ஒப்பந்த நாடுகளும் ஒருவருக்கொருவர் கலந்தாலோசித்துக்கொள்ளும்.

இந்த இராணுவக் கூட்டுப் படைகளின் தலைவராக முன்னாள் சோவியத் ரஷ்ய தரைப் படை சேனாதிபதியாக இருந்த மார்ஷல் ஐவான் கொனீவ் நியமிக்கப்பட்டிருக்கிறார். கூட்டு இராணுவப் படைகளின் தலைமைக்காரியாலயம் மாஸ்கோவில் அமைக்கப்படுமாம்.

கல்விக்கும் செல்வத்திற்கும் கடவுளர் கொண்ட நாட்டில்......

'பரிதாப நிலை' பற்றிய புள்ளி விவரங்கள்!

புதுடில்லி, மே 16—

இந்திய மக்களில் சுமார் பாதித் தொகையினர், நாள் ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு அன்றாடத் தேவைப் பொருட்களுக்காக ரூ. 13-க்கும் குறைவாகவே செலவிடுகின்றனர். இந்தக் குறைந்த தொகையில் பாதியை, சொந்த ஊர்களில் விளைவிக்கப்படும் உணவுப் பொருட்கள், அல்லது மற்றப் பொருட்களுக்காகச் செலவிடுகின்றனர்.

இந்தியாவிலுள்ள மொத்தம் 36 கோடி மக்களுக்குமாகச் சராசரி கணக்கெடுத்தால், நபர் ஒன்றுக்கு மாதம் ஒன்றில் ரூ. 22 தான் அன்றாடத் தேவைப் பொருட்களுக்காகச் செலவிடப்படுகிறது. ரூ. 9 மதிப்புக்கு உணவுப் பொருட்களாகச் செலவாகின்றன.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் தயாரித்துக் கொண்டிருக்கும் திட்டக் குழு, இந்தியாவின் 'பரிதாப நிலை'யைச் சுட்டிக்காட்டும் மேற்குறிப்பிட்டுள்ளசில புள்ளி விவரங்களைச் சேகரித்துள்ளதாம்.

மேலும், பள்ளிக்குச் செல்லும் வயதடைந்த குழந்தைகளின் தொகையில் பாதிக்கும் குறைவானவர்களே பள்ளி சென்று படிக்கிறார்கள்; அவர்களிலும் ஐந்தில் ஒரு பங்கிற்கும் குறைவானவர்களே செகண்டரி கல்விக்குச் செல்கிறார்கள் என்றும், இந்தியாவில் உள்ள மொத்தம் 5½ லட்சம் கிராமங்களில் 30,000 மக்களுக்கு ஒரு மருத்துவர் வீதம் கூட இல்லை என்றும் அக்குழு மேலும் சில புள்ளி விபரங்களைத் தந்திருக்கிறது.

சென்னையில் கைத்தொழில் 'எம்போரியம்'

சென்னையில் ஒரு கைத்தொழில் 'எம்போரியம்' கட்டுவதற்காக மத்திய சர்க்கார், சென்னை மாநில சர்க்காருக்கு ரூ 1½ லட்சம் மானியமாகத் தந்துள்ளதாம். இதற்காக அகில இந்திய கைத்தொழில் குழுவும் சிபாரிசு செய்திருந்ததாம்.

இது தவிர, ஆந்திர மாநிலத்திலுள்ள கொண்டாபள்ளியில் ஒரு பொம்மைக் கலைப் பயிற்சித் திட்டத்தை அமுல் செய்வதற்காகவும் கைத்தொழில்குழுவிற்கு ரூ 5,400 மானியமாகத் தரப்பட்டுள்ளதாம்.

இதுபோல, பீகாரில் பல நோக்குத் தொழில் நுணுக்கக் கழகமொன்றை நிறுவ ரூ. 1,03,540-ம், மேற்கு வங்க மரத் தொழில் அபிவிருத்தித் திட்டத்திற்கு ரூ. 66,270-ம் மானியமாகத் தரப்பட்டிருக்கிறதாம்.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கங்கள்

விபரங்களடங்கிய அறிக்கைகள்

இந்திய சர்க்காரின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் என்னென்ன செய்யவேண்டும் என்பது பற்றி பேராசிரியர் ஆர். காட்கில் தலைமையில் உள்ள பொருளாதார நிபுணர்கள் குழு 3 அறிக்கைகளைச் சமர்ப்பித்திருக்கின்றது. அந்த அறிக்கைகள் இப்போது திட்டக் குழுவின் பரிசீலனையில் இருந்து வருவதாகக் கூறப்படுகிறது.

அந்த மூன்று அறிக்கைகளிலும், "இரண்டாவது திட்டம், முதல் திட்டத்தைக் காட்டிலும் துணிந்து பெரும் பெரும் காரியங்களைச் செய்யக் கூடியதாக அமைக்கப்படவேண்டும்" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

தேசிய வருமானத்தைக் கணிசமாக அதிகரிக்கச் செய்தல், சர்க்கார் முயற்சிகளுக்கு விசேட கவனம் செலுத்தியும், முக்கிய பலதொழில்களுக்குத் தேவையான முக்கியத்துவம் அளித்தும் நாட்டை துரிதமாகத் தொழில் மயமாக்குதல், எல்லோருக்கும் முழு வேலை தருதல், சமூக நீதி வழங்குதல் ஆகிய இந்த 4 அம்சங்களுமே இரண்டாவது திட்டத்தின்போது முக்கிய பாகம் பெற்றிருக்கவேண்டுமென்று அவ்வறிக்கையில் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

இந்த 4 இலட்சியங்களையும் அடிப்படையாகக்கொண்டு வெளியிட்டுள்ள மற்றும் சில சிபாரிசுகளில், 'இரண்டாவது திட்ட காலத்தில் தேசிய வருமானத்தைக் கால் பங்கு அதிகப்படுத்துவது; 100 முதல் 120 லட்சம் புதிய வேலைகளை ஏற்படுத்துவது' என்ற இரண்டு சிபாரிசுகளையும் ஏற்கனவே திட்டக் குழுவும், தேசிய அபிவிருத்திக் குழுவும் ஏற்றுக் கொண்டுள்ளன.

அக் குழுவினர் தங்கள் சிபாரிசுகளில், சர்க்கார் முயற்சிகளை விரிவு படுத்தவேண்டுமென்பது அவசியமே என்றாலும், தனிப்பட்டோரின் முயற்சிகளும் நீடித்திருக்க வேண்டும் என்றும், தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் பொருட்களுக்கும், குடிசைத் தொழில்கள் மூலம் உற்பத்தியாகும் பொருட்களுக்கும் இடையேயுள்ள போட்டியைத் தவிர்க்கவேண்டுமென்றும் குறிப்பிட்டிருக்கின்றனர்.

நிலங்களுக்கு வரம்பு கட்டுவது போல், தனிப்பட்டவர்களின் எல்லா வருமானங்களுக்கும் அதிக பட்ச வரம்பு கட்டவேண்டும் என்பது உள்பட்ட நிலச் சீர்திருத்தங்களை உடனடியாக நடத்தவேண்டுமென்றும் தெரிவித்திருக்கின்றனர்.

வரிகள் போக, எந்த ஒரு தனி நபரின் வருமானமும் குறிப்பிட்ட காலத்தில் நிலவும் சராசரி வருமானத்திற்கு 30 மடங்குக்கு மேல் இருக்கக் கூடாதெனவும், மத்திய நிதி இலாகா பொருளாதாரப் பிரிவும், திட்டக் குழுவும் தெரிவித்திருக்கின்றன.

"'சமூக நீதி'க்கு உத்திரவாதம் அளிக்காவிட்டால் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டவேலைக்குக் குந்தகம் விளையும்" என்று அக் குழுவினர் தமது அறிக்கையில் எடுத்துக்காட்டியிருக்கின்றனர்.

தனி நபர் வருமானங்களுக்கு அதிக பட்ச வரம்பு கட்டுவதில் தான் கஷ்டம் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறதாம். அதைச் செய்வது உசிதமானதுதானா என்பது குறித்து காங்கிரஸ் மேலிடம் 'சந்தேகம்' கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

பாக். பெண்கள் முடிவு

கிளர்ச்சி முறைகளைக் கைவிடுவர்?

கராச்சி, மே 13—

பாகிஸ்தான் பிரதமர் முகமதலி செய்துகொண்ட இரண்டாவது திருமணத்தை எதிர்த்து நடத்தி வரும் கிளர்ச்சிகளை பாகிஸ்தான் மாதர்கள் கைவிடுவர் என்று தெரிகிறது. ஆனாலும், பிரதமரின் இரண்டாவது மனைவியாரான அலியா சாதியின் மீது (சமூக பகிஷ்காரம்) தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று கூறப்படுகிறது.

முகமதலியின் முதல் மனைவி பேகம் அலியை, சென்ற திங்களன்று பாகிஸ்தான் மாதர் சங்கத் தூதுக் குழு ஒன்று சந்தித்துப் பேசுகையில், அவர், மாதர் சங்கத்தவர் மேற்கொண்டுள்ள கிளர்ச்சிகளால் தனக்குத்தான் இக்கட்டான சூழ்நிலைகள் உருவாகி வருவதாகக் கூறியதாகவும், அதன் பேரிலேயே மேற்படி சங்கத்தவர் தங்கள் கிளர்ச்சிகளைக் கைவிட்டு விடுவதென முடிவு கட்டியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இலஞ்சக் குற்றம் சாட்டப்பட்ட மந்திரி

காங்கிரஸ் மேலிடம் ஆலோசனை

இலஞ்சக் குற்றம் சாட்டப்பட்டுள்ள பஞ்சாப் மந்திரியான ஜெகத் நாராயண் பிரச்சினை பற்றி காங்கிரஸ் மேலிடம் ஆலோசனை செய்யும் என்று தெரியவருகிறது.

பஞ்சாப் முதன் மந்திரி பீம்சென் சச்சார், புதுடில்லிக்கு வந்து பண்டித பந்த், மௌலானா ஆசாத் ஆகியோரைச் சந்தித்து, மந்திரி மீதுள்ள குற்றச்சாட்டுகளையும், அவைபற்றி தாம் விசாரித்தறிந்த குறிப்புகளையும் அவர்களுக்கு தந்துள்ளதாயும் தெரியவருகிறது.

கைத்தறி நெசவுத் தொழிலாளர் பொதுக் கூட்டம்

4—5—55 இரவு 8 மணிக்கு, சங்கரநயினர் கோவில், மாதரங் கோவில் வீதியில். திரு அ. நாராயணன் தலைமையில் நடைபெற்ற இவ்வூர் கைத்தறி நெசவுத் தொழிலாளர் சங்க சார்பில் நடைப்பெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் டி. ஆர். சுப்பிரமணியன், எம். பாண்டியன், பி. பழனிவேலு, எம் ஆறுமுகம், திருவுடையான், எம். ஆர். இராமசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்,

இறுதியில், நெல்லை மாவட்டத்தில் பல ஊர்களிலும் மிராசுதாரர்கள் விவசாயிகளை நிலத்திலிருந்து வெளியேற்றுவதைத் தடை செய்யவும், கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்குக் கூலி நிர்ணயம் செய்ய வேண்டுமென்றும், மத்திய சர்க்காரும், மாநில சர்க்காரும் கரைபோட்ட வேட்டி, சேலைகளை கைத்தறி நெசவுக்கே ஒதுக்க வேண்டுமென்றும், சர்க்கார்கள் தங்கள் தேவைக்கு கைத்தறி துணியையே பயன்படுத்த வேண்டுவதுடன், கைத்தறி ஆடைகள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் விற்பனையாக வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்றும் சர்க்காரைக் கேட்டுக் கொண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மேலும், சங்கரநயினர் கோவிலில் தீப்பெட்டித் தொழிற்சாலை ஒன்றை நிறுத கோவில்பட்டி ரோஜாப்பூ தீப்பெட்டி தொழிற்சாலை உரிமையாளரைக் கேட்டுக் கொண்டும், நூறுக்குக் கெட்டியான நயம் சாயம் தோய்க்கவும், நெசவாளர்களுக்கு ஊடை நூல் களிகளையும் கூலிகளையும் குறையாமல் கொடுக்கவும் 'மாஸ்டர் வீவர்'களைக் கேட்டுக் கொண்டும் தீர்மானிக்கப்பட்டது.

'இந்திய சர்க்கார் பட்டங்களைத் தென்னாட்டவர் மறுக்கத் தயங்கார்'

பாராட்டு விழாவில் மயிலை சிவமுத்து

9—5—55 மாலை 5½ மணியளவில், சென்னையில் டாக்டர் குருசாமி டி. டி. வி. உயர் பள்ளியில் திரு. மயிலை சிவமுத்து தலைமையில் திரு. ரா.பி.சேதுப்பிள்ளை, எம். எம். தண்டபாணி தேசிகர் ஆகியோருக்குப் பாராட்டுவிழா சிறப்புற நடைபெற்றது. திரு. கோ. வில்வபதி அவர்கள் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களுக்குப் பாராட்டுரை வாசித்தளித்தார். திரு. என். எஸ். வேங்கடாச்சாரியார் தண்டபாணி தேசிகர் அவர்களைப் பாராட்டி, வாழ்த்து மலரை பண் இசைத்துப்பாடி அளித்தார். மயிலை சிவமுத்து அவர்கள் தமது தலைமையுரையில் பேராசிரியர் சேதுப்பிள்ளை அவர்களை பாராட்டிப் பேசிவிட்டு, "இந்திய சர்க்கார் தென்னாட்டவருக்குப் பாராட்டுப் பட்டங்கள் கொடுக்கும் அதே நேரத்தில் தென்னாட்டவர் மீது இந்தி மொழியை வலுக்கட்டாயமாகத் திணிப்பார்களேயானால், தென்னாட்டவர்கள் தமக்குத் தரப்படும் அந்தப் பட்டங்களையெல்லாம் மறுப்பதற்கும் ஒரு சிறிதும் தயங்கமாட்டார்கள்" என்று குறிப்பிட்டார்.

பின்னர் டாக்டர் மு. வரதராசனார், சேதுப்பிள்ளை அவர்களின் தமிழ்ப் பணியையும், பல்கலைக் கழகத் தமிழ்த் துறையில் அவரது உழைப்பையும், இசையரசு தண்டபாணி தேசிகரின் தமிழ்த் தொண்டையும் பாராட்டிப் பேசினார்.

மற்றும், பேராசிரியர் பூ. ஆலாலசுந்தரனார், டாக்டர் எஸ். தருமாம்பாள், பா. கண்ணன், எஸ். எஸ். அருணகிரிநாதர், டி. கே. சண்முகம், அழகுவேல், சாரதாம்பாள், அ. மு. பரமசிவானந்தம், புலவர் குழந்தை ஆகியோரும் சொல்லின் செல்வரையும், இசையரசுவையும் பாராட்டிச் சொற்பொழிவாற்றினர்.

தமக்கு தெரிவித்துக்கொள்ளப்பட்ட பாராட்டிற்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில், திரு. சேதுப்பிள்ளை அவர்கள் தாம் தமிழ் மொழிக்கு இழுக்கு நேராவண்ணம் பணியாற்றத் தவறேன் என உறுதி மொழி கூறினர். அடுத்து திரு. தண்டபாணி தேசிகர் அவர்கள் தமிழ் இசையை வளர்ப்பதில் தாம் என்றும் தயங்கப்போவதில்லை என்று குறிப்பிட்டார்.

சென்னை—வண்ணை கே. எஸ். பாண்டியன் பகுத்தறிவுப் படிப்பகம்

8—5—55 இரவு 8 மணிக்கு தோழர் எஸ். எஸ். இ. மாயில் தலைமையில், படிப்பகத்தின் புதிய நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்றது. தோழர்கள் செ. பாண்டியன் செயலாளராகவும், நா. தி. சு. மூர்த்தி துணைச் செயலாளராகவும், எஸ். எஸ் இ மாயில் பொருளாளராகவும், 11 பேர் செயற் குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

15—5—55 இரவு 7 மணிக்கு, சென்னை—வண்ணை கே. எஸ். பாண்டியன் பகுத்தறிவுப் படிப்பகத்தில், தோழர் பொன். கு. கோதண்டபாணி தலைமையில் நடைபெற்ற சொற் பயிற்சிக் கூட்டத்தில் 'நாடு தந்த நல்லவர்கள்' எனும் தலைப்பில் தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

திருச்சி — மலைக்கோட்டை தி.மு.க.மறுமலர்ச்சிமன்றம்

7—5—55 இரவு 10 மணிக்கு தோழர் வை. இராமசாமி இல்லத்தில் நடைபெற்ற உறுப்பினர்கள் கூட்டத்தில், மே தின விழா நிகழ்ச்சியில் பங்குபெற்ற தோழர்களனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டும், தி. மு. கழக முன்னாள் பொதுச் செயலாளர் அண்ணா அவர்களுக்கு நன்றி தெரிவித்தும் புதிய பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களைப் பாராட்டியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

செய்திச் சுருள்

★

பொதுச்செயலாளருக்கு வரவேற்பும் தேநீர் விருந்தும்

5—5—55 இரவு 8 மணிக்கு, இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தி. மு. கழக பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது குறித்து மகிழ்ச்சி தெரிவிக்கும் வகையில், சென்னை—சேத்துப்பட்டு, ஆரிங்டன் தெரு, வ. உ. சி. இளைஞர் கழக மனையில், அன்னாருக்கு ஒரு தேநீர் விருந்து அளிக்கப்பட்டது. தோழர் வெ. சுப்பிரமணியனார் பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன் அவர்களை வரவேற்றுப் பேசினர்.

பொதுச் செயலாளர் அவர்கள் பேசுகையில், ஒவ்வொரு உறுப்பினரும் குறைந்தது இரண்டு புதிய உறுப்பினரையாவது சேர்க்க வேண்டுமென்றும், கழகத் தோழர்கள் மேலும் ஆர்வமுடன் பணியாற்ற வேண்டுமென்றும் கூறினர்.

பெண்ணாகடம் பொது நல ஊழியர் பண்ணை

9—5—55 மாலை 5½ மணிக்கு பெண்ணாகடத்தை அடுத்த கொல்லத்தங்குறிச்சி கிராமத்தில், 'சிவசிதம்பரம் மனை'யில் அமைந்துள்ள கழக உயர்நிலைப் பள்ளி பொதுநல ஊழியர் பண்ணையை தோழர் பாரதிதாசன் பார்வையிட்டார். அங்குள்ள மாணவர்களுக்கும், பொது மக்களுக்கும் அறிவுரை வழங்கினர்.

வ. ஆ. மாவட்டத்தில்

சி. பி. சிற்றரசு, முல்லை-சத்தி

வேலூர் :

8—5—55 மாலை 6 மணிக்கு, கோட்டைவெளி மைதானத்தில் நகர தி. மு. கழகச் சார்பில், தோழர் ம. பொ. சாரதி, எம் சி., தலைமையில் மே விழா கொண்டாடப்பட்டது. தோழர்கள் சி. பி. சிற்றரசு, கண்ணதாசன், முல்லை-சத்தி, கருத்தோவியன், இளஞ்செழியன், பாண்டியன் ஆகியோர்சொற்பொழிவாற்றினர்.

மருதவல்லி பாளையம் :

9—5—55 மாலை 6 மணிக்கு, தி. மு. கழகத் துவக்க விழா நடைபெற்றது. தோழர் சி. பி. சிற்றரசு கொடிஏற்றி வைத்தார்; தோழர் முல்லை - சத்தி அண்ணா அவர்கள் படத்தைத் திறந்து வைத்தார்; தோழர் கருத்தோவியன் தி. மு. கழகத்தைத் துவக்கி வைத்தார்.

கண்ணமங்கலம் :

9—5—55ல், தி. மு. க. தோழர்களால், தோழர் முல்லை-சத்தி அவர்கள் தலைமையில், 'தூக்கு மேடை' நாடகம் நடைபெற்றது. தோழர்கள் போளூர் - சுப்பிரமணியம், க. நெடுஞ்சோழன் சீர்திருத்த நாடகங்கள் குறித்து சொற்பொழிவாற்றினர்.

சந்தைப் புதுப்பாளையம் :

10—5—55ல், தி. மு. கழகச் சார்பில், முல்லை-சத்தி தலைமையில் மே தின விழா கொண்டாடப்பட்டது. தோழர்கள் சி. பி. சிற்றரசு, போளூர் சுப்பிரமணியம், நெடுஞ்சோழன், கருத்தோவியன், ஆரணி கன்னையன் ஆகியோர் 'மே தின விழாவும், தி. மு. கழகமும்' என்பது குறித்துச் சொற்பொழிவாற்றினர். அன்று மாலை ஊர்வலமும் நடைபெற்றது.

செங்கம் :

10—5—55 மாலை 5 மணிக்கு, தோழர் முல்லை-சத்தி தலைமையில் தி. மு. கழகக் கூட்டம் ஆரம்பமாகியது. தோழர்கள் சி. பி. சிற்றரசு, போளூர் சுப்பிரமணியம், நெடுஞ்சோழன், கருத்தோவியன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

தோழர் முல்லை—சத்தி அவர்கள், இந்தச் சுற்றுப்பயணத்தை வெற்றிகரமாக நடத்தித்தந்த தோழர்களுக்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் தன் நன்றியை அறிவித்தார்.

குறள் வகுப்பு—

அறத்துப்பால் நிறைவு விழா

12—5—55 மாலை 5½ மணிக்கு, டாக்டர் குருசாமி டி. டி. வி. உயர் பள்ளியில், சென்னை-பெத்துநாய்க்கன்பேட்டை தாய்மார் கழகச் சார்பில் நடைபெற்றுவரும் திருக்குறள் வகுப்பின் அறத்துப்பால் நிறைவு விழா டாக்டர் எஸ். தருமாம்பாள் அம்மையார் தலைமையில் நிகழ்ந்தது.

திருமதி வ. பா. தாமரைக்கண்ணியார் வரவேற்புரை நிகழ்த்தினர்.

சிறுவர்களால் நடனம், இன்னிசை, கோலாட்டம் முதலிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பின்னர், திரு. மயிலை-சிவமுத்து அவர்களைப் பாராட்டி ஒரு வாழ்த்துப்பா அளிக்கப்பட்டது.

திருமதி என். கண்ணம்மாள் அவர்கள், வாரந்தோறும் குறள் வகுப்பில் சொற்பொழிவாற்றிய பெண்மணிகளுக்குப் பரிசு வழங்கினர். தோழியர்கள் ஜே. சாரதாம்பாள், பார்வதி அம்மையார், அனுசுயாமோகனசுந்தரம், சந்திரா ராஜப்பா முதலியோர் திருக்குறளைப் பற்றியும், அதன் சிறப்புப் பற்றியும் விரிவுரையாற்றினர். திரு. மயிலை-சிவமுத்து அவர்கள் பொருட்பாலைத் துவக்கி வைத்துப் பேசுகையில் திருவள்ளுவர் திருநாளை, கல்லூரிகளிலும், உயர்நிலைப்பள்ளிகளிலும் ஜூலை மாதத்தில் கொண்டாடினாலும் தாய்மார்கள் வைகாசித் திருநாளில் கொண்டாடலாம் என்று கூறினர்.

இறுதியில் புலவர் தணிகை உலகநாதர், மலர்முகத்தம்மையார் ஆகியோர்; திருமதி கண்ணம்மாள் அவர்கள் பரிசு நூல்களின் விலையைத் தாமே ஏற்றுக்கொள்ள முன்வந்தது குறித்துப் பாராட்டுதல் தெரிவித்துக் கொண்டனர்.

அனுதாபக் கூட்டம்

சேலம் அம்மாப்பேட்டை தி. மு கழகத் தோழர் இ. எ. ஆர். இருளப்பன், கடந்த 3—5—55 அன்று இரவு சுமார் 10 மணியளவில் மோட்டார் சைக்கிள் விபத்தில் அகால மரணமுற்றதையொட்டி, 5—5—55 மாலை 6½ மணியளவில், காந்தி மைதானத்தில், தோழர் எஸ் என் எல்லப்பன் தலைமையில் ஒரு அனுதாபக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் ஆறுமுகம், கே எஸ்.மணி, எஸ் ஏ. அன்புக்கரசு, சிற்றனி சுப்பிரமணியம் இ. ஆர். கிருஷ்ணன், ஏ சித்தையன், டாக்டர் கே ஆர். கோபால் ஆகியோர் தோழர் இருளப்பன் அவர்களின் பொது வாழ்க்கை பற்றியும், அவர், கட்சிக்காகச் செய்த பேருழைப்பு குறித்தும், அவரது பிரிவால் வாடும் அவரது குடும்பத்தவருக்கு அனுதாபம் தெரிவித்தும் சொற்பொழிவாற்றிய பின்னர், அனுதாபத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

திருமணம்

12—5—55-ல், சென்னை சேத்துப்பட்டில், தோழர் எ. எம். கிருட்டிணன் — தோழியர் ஆர். காமாட்சி திருமணம் நடைபெற்றது. இத்திருமண நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை தரப்பட்டது. வரப் பெற்றோம் — நன்றி — பொறுப்பாளர்.

பிறப்பு

6—5—55-ல், விருத்தம்பட்டு தி. மு. கழகத் தோழர் எம். சி. செங்காதரம் அவர்களது துணைவியார் ஒரு ஆண் மகவுக்குத் தாயானார். மகவுக்கு 'நெடுஞ்செழியன்' என்று பெயரிடப்பட்டது. இதன் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது. பெற்றுக்கொண்டோம்—நன்றி—பொறுப்பாளர்.

பாக். இளைஞர்களின் எச்சரிக்கை!

பெண்களின் போர்க்கோலத்திற்கு எதிராக நடவடிக்கையாம்!

கராச்சி, மே 16—

"பாக் பிரதமர் முகம்மது அலி இரண்டாம் திருமணம் செய்து கொண்டதை எதிர்த்து பாகிஸ்தான் பெண்கள் ஈடுபடும் கிளர்ச்சி, 'ஆண்டவனின் கட்டளைக்கு விரோதமானது! இஸ்லாமிய பாரம்பரியத்திற்கு எதிரான புரட்சி," என்ற எச்சரிக்கும் விளம்பரத் தாள்கள் கராச்சி மதிற்சுவர்களில் காணப்படுகிறதாம்!

கராச்சி இளைஞர் சங்கம் என்று கூறப்படுகிற ஒரு இயக்கத்தவர், அந்த விளம்பரத் தாள்களில் கையொப்பமிட்டிருக்கின்றனராம்.

"முகம்மது அலி, தனது செயலாளராயிருந்த அலியா சாதியை திருமணம் செய்துகொண்டது, நபிகள் நாயக பாரம்பரியத்திற்கு உடன்பாடான ஒன்றுதான்," என்றும் அந்த விளம்பரத் தாள்களில் காணப்பட்டதாம்.

சென்ற வாரம்தான், முகம்மது அலியின் இரண்டாம் திருமணத்தைக் கண்டித்து, தாங்கள் நடத்தவிருந்த கிளர்ச்சிகளைக் கைவிட்டுவிட்டு, திருமணச் சீர்திருத்தச் சட்டங்களில் கவனம் செலுத்துவது என்று பாகிஸ்தானில் உள்ள எட்டு பிரபல பெண்களுக்கான இயக்கங்கள் இணைந்து அமைத்துள்ள பெண் உரிமை பாதுகாப்புக் கழகம் முடிவு செய்தது.

"கிளர்ச்சிகளுக்குப் பின்னால், ஆண்களோடு சரிசமமான உரிமையும், சுதந்திரமும் கோரும் பெண்கள், அரை நிர்வாண நடனங்களில் பங்கேற்று, இதயத்தையும் இல்லத்தையும் பாழாக்கி, நடுத்தெருவில் சிரிப்பதும், பழைய 'பர்தா' முறையைச் சீரழித்தும், இதுபோன்ற நடவடிக்கைகளால் இஸ்லாமிய ஒழுக்கக் கோட்பாடுகளையே அழித்து வருகின்றனர்," என்று, அந்த சுவரொட்டி விளம்பரங்கள் குற்றஞ்சாட்டின.

"இரண்டாம் திருமணம் செய்துகொள்ள விரும்பும் ஆண்களுக்கு அவமரியாதை தேடும் முயற்சியில் பெண்கள் தொடர்ந்து ஈடுபடுவார்களானால், ஒரு கணவனுடன் திருப்தியடையாத பெண்களின் பட்டியலைத் தயாரிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு இளைஞர் இயக்கம் ஆளாக்கப்படும்," என்றும் அந்த சுவரொட்டிகள் எச்சரிக்கை விடுத்ததாம்!

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசில் பிளவு!

இரு கோஷ்டிகளிடையே பதவிக்கு அடி-தடியாம்!

இலங்கை தொழிலாளர் காங்கிரசின் பொதுச் செயலாளர் பதவிக்கு இருவர் போட்டியிட்டனர்; போட்டியிட்ட இருவருக்காகவும் உள்ள இரண்டு கோஷ்டிகளும் தேர்தல் முடியுமுன்பே முட்டி மோதிக்கொண்டு, தேர்தலை நடைபெறாது செய்துவிட்டனராம்.

இலங்கை தொழிலாளர் காங்கிரசின் 14-வது வருடாந்திரக் கூட்டம் நடைபெறுகையிலேயே இந்தக் குழப்பமும், சச்சரவும், அடிதடியும் தோன்றினவாம்.

தொழிலாளர்களிடையே ஏற்பட்ட கைகலப்பை அடக்க, மேடையிலிருந்து தலைவர்கள் வந்து முயன்றும் முடியவில்லையாம்.

பின் போலீசார் பிரம்படிப் பிரயோகம் செய்திருக்கின்றனர்.

இலங்கை ஜனநாயக காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்ற இரு நிறுவனங்களும், இலங்கையில் வாழும் எட்டு லட்சம் இந்தியரின் பிரதிநிதிகள் என்று கூறிக்கொள்பவர்கள். இந்த இரண்டு நிறுவனங்களின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அஜீஸ் என்பவரை ஆதரிப்பவர்களை ஒருமுகப்படுத்தும் கோஷ்டி ஒன்றும், முன்னாள் தலைவர் தொண்டமானை ஆதரிக்கும் கோஷ்டி ஒன்றுமாக பிளவுபட்டு, ஒருவருக்கொருவர் அடிதடியில் இறங்கினராம். தொழிலாளர்கள் நிலை சீர்பட்டுவிட்டதாம். எவருக்கும் காயமேற்படவில்லை என்று தெரிகிறது.

திருச்சி மாவட்ட தி.மு.கழக செயற்குழு கூட்ட அழைப்பு

"22—5—55 ஞாயிறு காலை 10 மணிக்கு திருச்சி சிந்தாமணி கழக அலுவலகத்தில் மாவட்ட செயற்குழு அவசரக் கூட்டம் நடைபெறும். அதுபோது, மாநில மாநாட்டு நிதி வசூல், பொதுச்செயலாளர் வரவேற்பு, வட்டக் குழு அமைத்தல், மற்றும் கழக எதிர்கால வேலைகள் பற்றி தீர்மானிக்கப்படும். செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாது வர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்."

என்று, செயலாளர் அ. பெ. தர்மலிங்கம் அறிவிக்கிறார்.

கோவை மாவட்ட தி.மு. கழக செயற்குழு கூட்ட அழைப்பு

"22—5—55 ஞாயிறு மாலை 4 மணியளவில், பொள்ளாச்சி ராஜா தியேட்டரில் நடைபெறும் திராவிட முன்னேற்றக் கழக கோவை மாவட்டக் குழு கூட்டத்தில், மாவட்டப் பிரதிநிதிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றேன்;

"மாவட்டக் குழு கூட்டத்தில் மாநில மாநாட்டு நிதி, பொதுச் செயலாளர் வரவேற்பு, சழக அமைப்பு, வேலைத் திட்டங்கள் குறித்து ஆலோசிக்கப்படும்;

"மாநில மாநாட்டுக்கு இதுவரை சேர்ந்துள்ள நிதியை கொண்டு வர வேண்டுகின்றேன்,"

என்று, கோவை மாவட்ட தி.மு. கழகச் செயலாளர் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அறிவிக்கிறார்.

'வேதங்களின் வண்டவாளம்' தடை செய்யப்பட்டது!

சென்னை, மே. 17— தோழர் 'விவேகி' அவர்களால் எழுதப்பட்டுள்ள 'வேதங்களின் வண்டவாளம்' எனும் அறிவும், பயனும் விளைவிக்கத் தக்க நூலை சென்னை அரசாங்கம் தடை விதித்து விட்டதோடு, அதன் பிரதிகளைப் பறிமுதல் செய்யும்படியும் உத்தரவிட்டுள்ளது.

13-ந் தேதி மாலை சுமார் ஐந்து மணியளவில், போலீசார் 'திராவிடக் கலா நிலைய'த்திற்குச் சேன்று, அந்நூலின் பிரதிகளைப் பறிமுதல் செய்து கோண்டதோடு, அந்நூலின் முகப்பட்டைப் படத்துடைய 'பிளாக்கு'களையும் எடுத்துச் சென்றுள்ளனர் எனத் தெரிகிறது.

மதுரையில் பொதுச்செயலாளர்...

★

ஊர்வலம்

மாலை 5-30 மணிக்கு திடீர் நகரிலிருந்து, மதுரை நகர் இதுவரை கண்டிராத மாபெரும் ஊர்வலம் புறப்பட்டது. 10,000-த்திற்கு மேற்பட்ட தோழர்கள் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

ஊர்வலம் திடீர் நகரிலிருந்து டவுன்ஹால் ரோடு, மேலமாசி வீதி, வடக்குமாசி வீதி, கீழமாசி வீதி, கீழவெளி வீதி, முனிச்சாலை ரோடு, ராமனாதபுரம் ரோடு வழியாகச் சென்று, இறுதியில் வைகையாறு வந்தடைந்தது.

ஊர்வலம் வரும்போது வாணவேடிக்கைகளும், மலர்மாலைகள் சூட்டுவதும், கைத்தறி ஆடைகள் போடுவதுமாக மக்கள் தங்கள் மகிழ்ச்சியை தெரிவித்துக் கொண்டனர்.

★

கொடியேற்று விழா

அழகரடி வேலாயுதம் நினைவுப் படிப்பகம், பொன்னகரம் எண் 3 சந்து, டவுன்ஹால் ரோடு, வடக்கு மாசி வீதி, முனிச்சாலை ரோடு, இராமனாதபுரம் ரோடு, அண்ணாதுரை வாசகசாலை ஆகிய இடங்களில் தோழர் காஞ்சி கல்யாணசுந்தரம் கொடியேற்றி வைத்தார்

★

பொதுக் கூட்டம்

மாலை 7 மணிக்கு வைகையாறு திடலில், மதுரை மாவட்டச் செயலாளர் தோழர் எஸ். முத்து அவர்கள் தலைமையில், பொதுக்கூட்டம் நடைபெற்றது; லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டனர்.

தோழர்கள் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., காஞ்சி-கல்யாணசுந்தரம், ஏ. வி. சௌந்திரராசன், ஆகியோர் பேசியபின், பொதுச் செயலாளர் பேசினார்.

கூட்டத்தில் பொதுச் செயலாளருக்கு மலர்மாலைகளும், கைத்தறி ஆடைகளும், மாநில மாநாட்டிற்கு நிதியும் கிளைக் கழகத் தோழர்களாலும், பொது மக்களாலும் தொழிலாளர்களாலும் வியாபாரிகளாலும் அளிக்கப்பட்டன. (விபரங்கள் பின்னர் வெளிவரும்.)

கூபரோக பில்லை விற்பனை இயக்கங்கள் 1950-ல் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இதுவரை அவற்றின் மூலம் ரூ 40 லட்சம் வசூலாயிருக்கிறன.

அடக்குமுறை வலுக்கிறது

ஜோகனஸ்பர்க், மே 14— தென்னாப்பிரிக்க சர்க்கார் 'பாண்டு' என்ற பெயரில் நிறத்துவேஷ மனப்பான்மையை உள்ளடக்கி, ஆப்பிரிக்க சுதேசிகள் பள்ளிகளையெல்லாம் சர்க்கார் நிர்வாகத்திற்கு மாற்றிவிடும் வகையில் கொண்டுவந்த கல்விச் சட்டம் ஒன்றை எதிர்த்து அண்மையில் பெருங்கிளர்ச்சிகள் நடைபெற்றது நினைவிருக்கலாம்.

அந்தக் கிளர்ச்சி ஆர்ப்பாட்டங்களில் ஆப்பிரிக்க சுதேசியான எலயன்ஸ் மோனாரி எனும் நீக்ரோவர் கலந்துகொண்டதற்காக, அவர் உடனே பினோனி சுரங்கப்பகுதியை விட்டு வெளியேறி வடக்குக் கேப் மாகாணத்திலுள்ள ஒரு பண்ணையில் கலவரம்பில்லாமல் வசித்துவர வேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறதாம்.

இந்த உத்தரவு தென்னாப்பிரிக்க கவர்னர்-ஜெனரல் டிரெக் ஜான்சன் என்பவரது கையெழுத்துடன் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

அந்த ஆப்பிரிக்கச் சுதேசி பினோனி தொழில் நகரத்தில் வசிப்பதால், நகரத்தின் அமைதிக்கும், சர்க்கார் நிர்வாகத்திற்கும் பங்கம் விளையக்கூடும் என்று அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டிருக்கிறதாம்.

காஷ்மீர் பேச்சுவார்த்தை பயனற்றுப் போகுமா?

'சோதனை மிகுந்த கட்டம்' என டெல்லியின் கவலை

புதுடில்லி, மே. 16—

கடந்த இரு தினங்களாக பாகிஸ்தான்—இந்தியா ஆகிய இரு நாட்டு பிரதமர்களிடையேயும் நட்புறவுடன் நடைபெற்று வரும் பேச்சு வார்த்தைகள், நாளையதினம், மிக நெருக்கடியான சோதனை மிகுந்த கட்டத்தினை அடையுமென்று கூறப்படுகிறது.

இன்றுடன் முடிவடையவிருந்த அந்தப் பேச்சு வார்த்தைகளை மேலும் இரண்டு நாட்களுக்கு பாகிஸ்தான் தலைவர்கள் நீடித்திருக்கின்றனர் என்று தெரிய வருகிறது.

இதுவரை நடைபெற்ற பேச்சு வார்த்தைகள் எந்தவிதமான முன்னேற்றத்தையும், காஷ்மீர் பிரச்சினைக்கு பரிகாரம் தேடும் வகையில் அடையவில்லை என்று மட்டும் தெரிகிறது. ஆனாலும், பேச்சு வார்த்தைகள் மிகவும் சுமுகமான முறையில் நடைபெற்றதாயும், பாகிஸ்தான் கவர்னர்-ஜெனரல் குலாம் முகம்மதுவிற்கு அடிக்கடி பேச்சு வார்த்தைகள் பற்றிய விபரங்களை பாக் தலைவர்கள் அறிவிப்பதாயும், அவருடைய யோசனையைக் கேட்டுக் கொள்வதாயும் கூறப்படுகிறது.

தொடர்ந்து நடைபெறும் பேச்சு வார்த்தைகள் காஷ்மீர் பிரச்னைக்கு எந்தவித பரிகாரத்தையும் தேடாமலேயே முடிந்துவிடக் கூடும் என்ற அச்சம் பலப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

சென்னை 17-வது வட்ட தி. மு. கழகச் செயற் குழு உறுப்பினர்கட்கு

18—5—55 இரவு 9 மணிக்கு, கழக மனையில் அவசரச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். ஆண்டறிக்கை பரிசீலித்தல், வட்டச் செயலாளருக்கு வரவேற்பளித்தல் ஆகியவை பற்றி ஆலோசிக்கப்படும்.

சென்னை 50-வது வட்ட தி. மு. க. நிர்வாக உறுப்பினர் அவசரக் கூட்டம்

18—5—55 இரவு 8 மணிக்கு, புதிய கழக மனையில் கழக நிர்வாகக் குழுவினரின் அவசரக் கூட்டம் நடைபெறும். 14-5-55 அன்று நடைபெறவிருந்த மேர்படி கூட்டத்தில் மேற்கொள்ளப்படவிருந்த பிரச்சினைகள் குறித்து ஆராயப்படும்.

* * *

பொதுக் கூட்டம்

22—5—55 இரவு 7 மணிக்கு, இராபர்ட்சன்பேட்டையிலுள்ள மேற்படி கழக மனைக்கு எதிரில், தோழர் கி. சமூகன் தலைமையில் கழக மனை மாற்ற அறிமுகப் பொதுக்கூட்டம் நடைபெறும்.

திருக்குறள் மன்ற ஆண்டு விழா

19—5—55 மாலை 4½ மணிக்கு, பழனி, அடிவாரம் வி. வி சி. ஆர். முருகேசன் இல்லத்தில், தோழர் எஸ். ஆர். சங்கரநாராயணன் தலைமையில் நடைபெறும். தோழர் திருக்குறள் முனுசாமி எம். பி, தோழியர் அருண்மொழி ஆகியோர் பேசுவர்.

கழக மனை மாற்றம்

சென்னை 50-வது வட்ட தி.மு. கழக மனை, விசுவலிங்கம் செட்டி முதல் வீதி, எண் 5 இல்லத்திலிருந்து மயிலை, இராபர்ட்சன் பேட்டை, வேலாயுதராஜா வீதி எண் 7 இல்லத்தில் (முன்னாள் வள்ளுவர் மன்றத்திற்கு) மாற்றப்பட்டிருக்கிறது.

அப்பீல் செய்கிறார்!

இலஞ்சக் குற்றம் சாட்டப்பட்டு, பஞ்சாப் உயர்நீதி மன்றத்தால் இரண்டாண்டு காலம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டுள்ள ஐ. சி. எஸ் அதிகாரியான வெங்கட்ராமன் என்பவர், தமக்குத் தரப்பட்ட தண்டனையை எதிர்த்து தலைமை உயர்நீதி மன்றத்திற்கு அப்பீல் செய்துகொள்ள விசேட அனுமதி தருமாறு மனுச் செய்திருக்கிறாராம் இத்துடன், தம்மை ஜாமீனில் விடுதலை செய்யுமாறும் கேட்டுக்கொண்டு மனுச் செய்து கொண்டுள்ளாராம்.

இந்த இரண்டு மனுக்களும் வருகிற 19-ந் தேதியன்று தலைமை உயர்நீதி மன்றத்தின் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்

முதன் முதலாக, அவர்மீது சாட்டப்பட்ட இலஞ்சக் குற்றச்சாட்டை விசாரித்த டெல்லி விசேட மாஜிஸ்திரேட் அவருக்கு 6 மாத வெறுங்காவல் தண்டனை விதித்திருந்ததும், அதனை எதிர்த்து அப்பீல் செய்துகொண்ட மனுவின் மீது நடைபெற்ற விசாரணையின் போது பஞ்சாப் உயர் நீதி மன்ற நீதிபதி, இரண்டாண்டுக் கடுங்காவல் தண்டனையாக அந்தத் தண்டனையை உயர்த்தியதும் நினைவிருக்கலாம்.

மணவீடு பிணவீடான பரிதாபம்!

பெங்களூர், மே 16—

தன்னயகானஹள்ளி எனும் கிராமத்தில் 'திருமண வீடொ'ன்று திடீரென 'பிண வீடா'ன சம்பவம் நடைபெற்ற செய்தி ஒன்று வெளிவந்திருக்கிறது.

அந்தத் திருமண வீட்டில், உணவுக்கான குழம்பு தயாரித்துக் கொண்டிருக்கும்போது, குழம்பு கொதித்துக் கொண்டிருக்கையில் திடீரென அந்த மண் பாண்டம் வெடித்ததின் காரணமாக அருகிலிருந்த இரண்டு பெண்மணிகள் வெந்து மாண்டனராம். மேலும் 6 பேர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருக்கின்றனராம்!

குளிர் பானங்கள் குடிக்கத் தடை!

கல்கத்தாவில் தற்போது கடும் வெய்யில் அடிக்கிறதாம். வெயிலின் கோரத்தைத் தாங்க முடியாமல் தவிக்கும் நகர மக்கள் 'ஐஸ்கிரீம்' போன்ற குளிர்பானங்கள் குடிப்பதும் தடை செய்யப்பட்டிருக்கிறதாம்.

இதற்குக் காரணம், கல்கத்தா நகர்ப் பகுதிகளில் காலரா வியாதி பரவியிருப்பதால், அவற்றை விற்பனை செய்யக்கூடாதென கல்கத்தா நகர சபை உத்திரவு பிறப்பித்துள்ளதுதானாம்.

கல்கத்தா நகரில், பகல் காலத்தில் அடிக்கும் அனல் காற்று தாங்கமுடியாத உஷ்ணத்தைக் கொண்டிருக்கிறதாம். கடந்த இரண்டு மூன்று நாட்களில், இங்குள்ள வெயிலின் வெப்பம் 105 டிகிரியிலிருந்து 108 டிகிரியாக உயர்ந்துவிட்டதாம். தெருக்களில் போடப்பட்டிருக்கிற 'தார்' ஆவி கிளப்பிக் கொண்டிருக்கிறதாம்!

1954-ல், காதி-கைத் தொழில்கள் அபிவிருத்திக்காக ஆலைத் துணி மீது விதிக்கப்பட்ட கூடுதலான எக்ஸைஸ் வரிமூலம், ரூ. 6,92,18,000 கிடைத்தது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.